**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, SIRKALI**

**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure)

**Case No.CC. 198/2023**

| | | | |
|---|---|---|---|
| Deposition of Name | செந்தில் SSI-276 | Prosecution | LW-9 as PW -8 |
| Father Name | சுப்பிரமணியன் | Defence | |
| Station | திருமுல்லை வாசல் கடற்கரை PS. | Taluk | சீர்காழி |
| Calling | | Age | 59/2025 |

Solemnly affirmed by Tmt.K. Geetha, Grade 3 bench clerk of this Court in accordance with the provisions of Act X of 1873 of the day

**10.07.2025 எதிரிகள் ஆஜர்**

**சத்தியபிரமாணம் பெறப்பட்டது.**

**முதல் விசாரணை**

நான் தற்போது திருமுல்லைவாசல் கடற்கரை காவல் நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். வழக்கு சமயத்தில் நான் சீர்காழி காவல் நிலையத்தில் பணிபுரிந்தேன். கடந்த 21.01.2023 ம் தேதி 13.00 மணிக்கு நான் நிலைய பொறுப்பு அலுவலில் இருந்த போது கடந்த 11.01.2023 ம் தேதி 12.30 மணியளவில் சீர்காழி அரசு மருத்துமனையில் இருந்து கிடைத்ததகவலை பெற்று அங்கு உள்நோயாளியாக சிகிச்சையில் இருந்த பவித்ரா க/பெ.ரஞ்சித் என்பவரை விசாரணை செய்து அவரிடமிருந்து புகார் வாக்குமூலம் பெற்று அன்றைய தினமே சீர்காழி காவல் நிலையம் மனு எண்.49/2023 விசாரணைக்கு எடுத்து கொண்டு சம்பவம் உண்மை என தெரிய வந்ததால் சீர்காழி காவல் நிலைய குற்ற எண் 40/2023 இதச பிரிவுகள் 294b, 354, 323, 506(i) ன் கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தேன். அந்த **முதல் தகவல் அறிக்கை அசாஆ.2 ஆக குறியீடு** செய்யப்படுகிறது.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

1. அசா.1 தாக்கப்பட்டது சம்பந்தமாக எனக்கு 11.01.2023 ம் தேதி சீர்காழி GHயில் இருந்து தகவல் கிடைத்தது என்றால் சரிதான். அந்த தகவலின் பேரில் தான் நான் அங்குசென்று வாக்குமூலம்வாங்கினேன் என்றால் சரிதான். அந்த வாக்குமூலத்தில் வாயிலாக நான் அசா.1 காயம் பட்டுள்ளார் என்பதையும், மேற்படி

மருத்துவ மனையில் உள்நோயாளியாக சிகிச்சை பெற்றுவருகிறார் என்று தெரிந்து கொண்டேன் என்றால் சரிதான். அந்த வாக்குமூலத்தின் படி எதிரிகள் Cognizable offence செய்துள்ளார்கள் என்றுதெரிந்து கொண்டேனா என்றால் அமாம். அப்படி இருந்த போதும் நான் நேரடியாக முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யாமல் மனு ரசீது எண்.49/2023 மட்டுமே வழங்கினேன் என்றால் சரிதான். Cognizable offence ஆக இருந்தால் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யாமல் விசாரணை செய்வதற்கு போலிசுக்கு வழிகாட்டு நெறிமுறைகள் இருக்கிறதா என்றால் இருக்கிறது. எந்த சட்டத்தில் இருக்கிறது என்றால் அது எனக்கு ஞாபகம் இல்லை. இவ்வழக்கை எப்படி விசாரிக்க வேண்டும் மற்றும் என்ன முறையில் குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்ய வேண்டும் என்பதற்கான அம்சங்கள் காவல் நிலையாணை விதிகளில் உள்ளது என்றால் சரிதான்.

2. என்னிடம் கொடுக்கப்பட்ட வாக்குமூலத்தின் படி அசா.1 மயிலாடுதுறை தாலுக்கா காளி என்ற கிராமத்தை சேர்ந்தவர் என்றால் சரிதான். சம்பவம் நடந்ததாக சொல்வது எதிரிகள் வசிக்கும் சீர்காழி தாலுக்கா திட்டை, சிவனார் விளாகம் என்ற பகுதியை சேர்ந்தவர்கள் என்றால் சரிதான். அசா.1ன் கணவர் தான் இந்த வழக்கின் முதல் எதிரி என்றால் சரிதான். இரண்டாவது எதிரி அசா.1 ன் மாமனார் என்றால் சரிதான். மூன்றாவது அசா.1 ன் கணவரின் சகோதரர் என்றால் சரிதான். சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் அதே தேதியில் அசா.1ம் அவர்களை சேர்ந்தவர்களும் எதிரிகளை தாக்கியதாக ஒரு புகார் கொடுக்கப்பட்டு அந்த புகாருக்கும் மனு எண்.50/2023 என்று நம்பர் கொடுத்து அதனையும் விசாரணை செய்து 21.01.2023 அன்று முதல் தகவல் அறிக்கை பதிவு செய்துள்ளேன் என்றால் சரிதான். அந்த வழக்கும் இதே நீதிமன்றத்தில் விசாரணையில் உள்ளது என்றால் சரிதான்.

3. அசா.1க்கும் முதல் எதிரிக்கும் மயிலாடுதுறை நீதிமன்றத்தில் குடும்ப வன்முறை சட்டப்படியான வழக்கு நடைபெறுவதாக என்னுடைய விசாரணையில் தெரிந்து கொள்ளவில்லை அது பற்றி அசா.1 என்னிடம் சொல்லவில்லை என்றால் சரிதான். அசா.1ன் மீது முதல் எதிரி விவாகரத்து கேட்டு சீர்காழி சார்பு நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்துள்ளதாக தெரிந்து கொண்டேனா என்றால் இல்லை. அசா.1க்கும் முதல் எதிரிக்கும் குடும்பம் நடத்துவது பற்றி ஏற்பட்ட கருத்து வேறுபாட்டின் அடிப்படையில் இருவரும் பிரிந்து வாழ்ந்து வருவதாக என்ற விபரத்தை விசாரணையில் தெரிந்து கொண்டேனா என்றால் தெரிந்து கொண்டேன். அசா.1 என்னிடம் கொடுத்துள்ள புகார் வாக்குமூலத்தின் அடிப்படையில் எந்த சம்பவமும் நடைபெறவில்லை என்றாலும் எதிரிகள் குடும்பத்தை பழிவாங்கும் வேண்டும் என்ற அடிப்படையில் அசா.1 தனக்கு தானே காயங்களை ஏற்படுத்திகொண்டு பொய்யான

புகாரினை கொடுத்துள்ளார் என்றால் சரியல்ல.

4. அசா.1 ன் தரப்பினர் தான் எதிரிகளை எதிரிகளின் ஊருக்கு வந்து 11.01.2023 அன்று தாக்குதலில் ஈடுபட்டு இருக்கிறார்கள் என்றாலும் அந்த வழக்கில் இருந்து தப்பிப்பதற்காக நேரடியாக காவல் நிலையத்திற்கு வராமல் அசா.1 சீர்காழி GH-யில் தனது செல்வாக்கை வைத்து சிகிச்சைக்கு சேர்ந்துள்ளார்கள் என்றாலும் சரியல்ல. Cognizable offence யில் மனு எண் கொடுத்து விசாரணை செய்த பிறகு முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யலாம் என்று மேலதிகாரி வாய்மொழி உத்தரவுகள் கொடுத்துள்ளார்கள் என்றால் சரிதான். அது போன்று எந்த வித வாய்மொழி உத்தரவும் கொடுப்பதற்கு காவல் துறைக்கு அதிகாரம் இல்லை வழக்கு ஒருசார் முன்னிலை எடுப்பதற்கு வசதியாக இந்த நடைமுறை பின்பற்றப்பட்டுள்ளது இந்த நடைமுறை சட்டத்திற்கு புறம்பானது என்றால் சரியல்ல. இரண்டு வழக்குகளிலும் நான் தான் மனு எண் கொடுத்து முதல் தகவல் அறிக்கைகள் பதிவு செய்துள்ளேன் என்றால் சரிதான். என்னை காவல் உதவி ஆய்வாளர் விசாரணை செய்து Crpc.161(3) படி வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். அந்த விசாரணையில் ரஞ்சித் தரப்பினர் அசா.1ன் தரப்பினர் மீது புகார் கொடுத்து அதற்கு மனு எண் கொடுத்தது சம்பந்தமாகவும் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்துள்ளது சம்பந்தமாகவும் அந்த வாக்குமூலத்தில் நான் கூறவில்லை என்றால் சரிதான். அசா.1 கொடுத்த புகார் மீது முதல் தகவல் அறிக்கை பதிவு செய்து மேல் விசாரணைக்கு வைத்திருக்க வேண்டும் என்றும் ஒரு சார்பு நிலை எடுத்து அசா.1ன் தரப்பினருக்கு சாதகம் செய்யும் நோக்கில் மனு எண் கொடுத்து விசாரணை செய்த பிறகு 10 நாட்கள் கழித்து முதல் தகவல் அறிக்கை பதிவு செய்துள்ளேன் என்றால் சரியல்ல. அசா.1 கொடுத்த வாக்குமூலத்தில் இந்த சம்பவம் யார் யாருக்கு தெரியும் என்று பெயர் குறிப்பிட்டு கூறவில்லை என்றால் சரிதான்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை முடித்துக்கொள்ளப்பட்டது**

**மறுவிசாரணை இல்லை.**